**கங்க இஹல கோரளை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 26 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 25 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 14 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கங்க இஹல கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் அதிகாரப் பிரதேசத்தில் 05 நிறுவனங்களினால் பொருத்தப்பட்டிருந்த 10 செலுத்துகை டவர்களில், 08 டவர்களுக்காக 1993 ஆண்டு முதல் 2012 ஆண்டு வரை பெற வேண்டிய ரூபா 237,000 தொகை கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது செலுத்தப்பட்ட ரூபா 19,429,055 இற்கான தொகை ஒன்று ரூபா 16,173,485 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் சொத்துக்கள் ரூபா 3,255,570 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிவேடுகளின் பிரகாரம் 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை எத்கால மற்றும் குருந்துவத்த விளையாட்டுத் திடல்களில் அபிவிருத்தி வேலைகளுக்காக முறையே ரூபா 7,708,307 உம் மற்றும் ரூபா 11,509,118 உம் செலவிடப்பட்டிருந்த போதிலும் விளையாட்டுத் திடல்களின் பெறுமதியினை கணித்து கணக்கிடு செய்திருக்கவில்லை.

(ஈ) 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது பெற வேண்டிய ரூபா 536,750 இற்கான முச்சக்கர வண்டி தரிப்பிடக் கட்டணம் கணக்குகளில் இருந்து விடுபட்டிருந்தது.

(உ) 2010 முதல் 2012 ஆண்டுகள் தொடர்பாக பாதைகளை சேதப்படுத்தியதற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 1,099,245 இற்கான தொகை ஒன்று பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) 2014 திசெம்பர் 24 விசாரணை செய்யப்பட்ட ரிட் இலக்கம் 33/13இன் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய சட்டவறிஞர் கட்டணம் ரூபா 7,000 தொகை தொடர்பாக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 222,705 இற்கான விளப்பரக் கட்டணம் ரூபா 61,000 என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 161,705 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பராமரிப்பு உதவி மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பாக பலவினக் கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் மீதி ரூபா 1,154,745 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,294,730 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 139,990 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 79,790,772 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் 04 விடயங்கள் 01 வருடத்தை மிகைத்திருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,461,084 ஆகக் காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 85,926,500 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 23,809,209 ஆகும்.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போத அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக்கோவை | |
| (i) விதி 59-66 | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் வருமான நிருவாகியினால் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்கள் உட்பட வியாபார நிலையங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) விதி 218 | காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,728,674 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,449,862 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 5,278,812 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------------------

2014 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானத்தில் ஆண்டின் போது அறவீடுகளின் பிரகாரம் வீத வரி, ஏக்கர் வரி, வாடகை மற்றும் நீர்க் கட்டணம் அறவீடுகளின் நிலைமை பலவீன நிலையில் காணப்பட்டதுடன் அவை நூற்றிற்கு 47 விட குறைந்த பெறுமதி ஒன்றினையே கொண்டிருந்தது.

2.2.2 வீத வரியும் ஏக்கர் வரியும்

-----------------------------------------------

வீத வரி மற்றும் ஏக்கர் வரி தொடர்பாக ஆண்டின் போது சிட்டை இடப்பட்ட வருமானத்தில் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 54 விட குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.
சபையின் வீத வரி மற்றும் ஏக்கர் வரி அறவீடுகள் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 2,065,066 இற்கான திரண்ட நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், அப் பணத்தில் அறவீடு செய்திருந்தத ரூபா 772,150 ஆகிய நூற்றிற்கு 37 இற்கான தொகையொன்று மாத்திரமே. ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 858,361 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் சேகரித்தல் ரூபா 458,981 ஆகிய நூற்றிற்கு 53 மாத்திரமே காணப்பட்டது. அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த திரண்ட நிலுவை ரூபா 1,756,578 ஆக காணப்பட்டதுடன், 2015 ஜூன் 30 திகதி வரை இந்த மீதியில் ரூபா 1,684,513 தொகையொன்று தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவையில் இருந்து ரூபா 205,532 தொகையொன்று அரச நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய வீத வரியாகும்.

2.2.3 நிலுவை வாடகை

---------------------------------

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்கு அறவிடப்பட வேண்டி காணப்பட்ட ரூபா நிலுவை கடை வாடகை/ குத்தகை வருமானம் ரூபா 778,124 தொகையாகும்.

(ஆ) குருந்துவத்தை வர்த்தக தொடர் கட்டிடத்தில் இலக்கம் 01 மற்றும் 34 கடைகளில் தொடர்ந்தும் வாடகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 207,272 இற்கான நிலுவை மீதியொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) எத்கால வர்த்தக தொடர் கட்டிடத்தில் இலக்கம் 03 மற்றும் இலக்கம் 13 கடைகள் இரண்டும் மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 03 ஆம் இலக்க கடையில் இருந்து ரூபா 142,200 வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) எத்கால வர்த்தக தொடர் கட்டிடத்தில் 19 ஆம் இலக்கக் கடை 1½ வருடத்திற்கு மீன் விற்பனை நிலையம் ஒன்று நடவத்துவதற்காக மாதாந்தம் ரூபா 2,000 வீதம் வாடகைக்குக் கொடுத்திருந்ததுடன், தண்டப் பணத்துடன் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 39,800 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 வாடகை

---------------

(அ) 2007 ஆண்டு முதல் வாடகைக்கு கொடுத்திருந்த 05 வெற்று நிலத் துண்டுகளுக்காக வாடகை ஒப்பந்தம் 2010 ஆண்டின் போதே கையொப்பமிடப்பட்டிருந்தது.

(ஆ) பழைய பிரதேச சபை கட்டிடத்தை வாடகைக்கு கொடுத்தன் மூலம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 42,300 தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன், அத் தொகை 2015 ஜூன் மாதம் வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக கம்பளை நீதி மன்றில் காணப்படும் M6656 வழக்கு தொடர்பாக வழக்கு கட்டணமாக ரூபா 5,000 தொகை 2013 செப்டம்பர் 11 திகதி செலுத்தப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

(அ) ஆண்டின் போது ஆரமப்பிக்கப்பட்ட, பூர்த்தி செய்யப்பட வேண்டிய ரூபா 10,350,000 பெறுமதியான 14 நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிக்கவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் போது அங்கீகாரமற்ற 02 நிர்மாண வேலைகள் 2014 ஆண்டின் போது 14 அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக 2015 ஜூலை 22 திகதி வரை முறையான செயற்பாடு ஒன்று எடுத்திருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 06 திகதிய இலக்கம் 1840 கொண்ட இலங்கை சனநாயக குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் முச்சக்கர வண்டி ஒன்று நிறுத்தி வைக்கும் இடத்து, முதல் தடவை பதிவு செய்யும் போது ரூபா 5,000 தொகை ஒன்று அறவிடப்பட வேண்டும். எனினும் பதிவு செய்யப்பட்டுள்ள 06 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் நிறுத்தப்படும் முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கையை கணித்து பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவ்வாறு இது தொடர்பாக துணை விதிகளும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பளை மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம் 50/60 மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 25,000 இற்கான தொகை 2012 முதல் 2015 ஜூன் 24 திகதி வரை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

(அ) 2011 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 384,090 செலவிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த உயிர் வாயு அலகு சுமார் ஒரு மாதம் அளவில் செயற்படு நிலையில் காணப்பட்டு பின்னர் செயலிழந்துள்ளது. 2015 ஜூலை மாதம் வரை அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் மூலம் ரூபா 100,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அத் திருத்த வேலையை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமையால் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையும் சேமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தொழில் பயிற்சி நிலையம் ஒன்றிற்காக 1496 சதுர அடி கொண்ட கட்டிடம் ஒன்று 2011 ஆண்டின் போது வழங்கியிருந்ததுடன் இது தொடர்பாக ஆவணங்கள் ஏதும் பிரதேச சபையில் காணப்படவில்லை. 2015 ஜூலை மாதம் வரை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---

மாகாண குறிப்பிட்ட அபிவிருத்தி மானியம் 2013 இன் கீழ் மெதரட உள்ளூராட்சியின் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டு செயற்திட்டம் E – நென பியஸ விற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 மார்ச் 05 திகதிய சிபிசி/சிஎல்சி/4/4/1/97-II கொண்ட கடிதத்தின் பிரகாரம் ரூபா 680,647 பெறுமதியான பண்டங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த E – நென பியஸ மேம்பாட்டு செயற்திட்டம் 2015 ஜூலை மாதம் வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையால் ரூபா 680,647 பெறுமதியான சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிராகரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 10 முதல் நூற்றிற்கு 42 வரையும், 05 செலவு விடயங்களில் நூற்றிற்கு 37 முதல் நூற்றிற்கு 61 வரையும் முரண்கள்

அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 மனித வள முகாமைத்துவம்

----------------------------------------------------

சபையினால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூன்றாம் தர வெற்றிடம் ஒன்றும் இரண்டாம் தர 09 வெற்றிடங்களும் ஆரம்ப தர சேவையில் பதவி ஒன்றும் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் ஆரம்ப சேவை 04 பதவிகளில் 06 ஊழியர்கள் மிகையாக காணப்பட்டதுடன் அங்கீகாரம் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்